1992 பிப்ரவரி 7]

Dr. (Tmt.) BEATRIX D'SOUZA : Hon. Speaker, Sir, the Hon. Chief Minister, in one of her Election speeches, once described this type of employment as bonded labour, a contract between the lion and the lamb. There are about 400 such College teachers, i.e. about 10 per cent of the total number of teachers of the Government Colleges, and many of them have Research Degrees. At present, there is a very poor utilisation of human resources because I know for certain that there are so many College Departments which are under-taffed, one example being the College at Vaniyambadi. Therefore, my question is this. When there are so many vacanvies, why can't these College teachers be inducted on a permanent basis?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அடிமை முறையோ அல்லது ஆண்டான் முறையோ இல்லை. சில காரணங்களினாலே, ஆசிரியர்கள் ஒப்பந்த முறையிலே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அதற்குப் பிறகு, அவர்களுக்கு பதவி உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்கள் குறிப்பிடுகிற வாணியம்பாடி கல்லூரி ஒரு தனியார் கல்லூரி. அதிலும் சிறுபான்மை இனத்தவர் நடத்துகிற கல்லூரி. அங்கே என்ன நடைபெறுகிறது என்றே அரசாங்கத்திற்குத் தெரியாது. ஆகவே, அவர்கள் குறிப்பாகத் தகவல் தந்தால் கூட, அரசாங்கம் அங்கே கேட்டாலும், அவர்கள் பதில் அளிக்க மாட்டார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அப்படி ஏதாவது தவறுகள் இருக்குமேயானால், அதைச் சுட்டிக்காட்டினால், அதை உடனே தீர்த்து வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 86. செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

86—

கிள்ளையில் மருத்துவமனை.

*343 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி கிள்ளையில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 பிப்ரவரி 7

செல்வி கோ.மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளைப் பகுதி மீனவர்கள் நிறைந்த பகுதியாக இருப்பதால், இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, இன்னலுற்ற மீனவ மக்களுக்கு உடனடி மருத்துவ வசதி கிடைக்கும் பொருட்டு, அந்த இடத்தில் மருத்துவமனையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளையிலிருந்து சுற்றிச் சுற்றி மருத்துவ மனைகள் பல இருக்கின்றன. உதாரணமாக, கிள்ளையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் பரங்கிப்பேட்டை என்ற இடத்திலே ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது. 4 கிலோ மீட்டர் தொலைவிலே புவனகிரி மற்றும் புதுச்சத்திரம் என்ற இரண்டு இடங்களிலேயும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதே போல், 6 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள சிதம்பரம் நகரத்திலே ஒரு வட்ட தலைமை மருத்துவமனை இருக்கிறது. எனவேதான் அங்கு தேவையில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, அதைச் சுற்றி நிறைய மருத்துவமனைகள் இருக்கிற காரணத்தால், தனியாக அங்கே மருத்துவமனையைத் துவங்குகிற நோக்கம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 87, திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

கானாடுகாத்தான் பகுதியில் விமான நிலையம்.

87—

*1449 திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், கானாடுகாத்தான் பகுதியில் சிறிய விமான நிலையம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் கானாடுகாத்தான் கிராமத்தில் சிறிய விமான நிலையம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யத் தற்போது அவசியமென்று கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 88. திரு. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.